www.Padasalai.Net www.TrbTnpsc.com

TS8T

தென்காசி மாவட்டம்

மூன்றாம் இடைப்பருவ பொதுத் தேர்வு - 2025

8 3 1 7

வகுப்பு 8

தமிழ்

கால அளவு: 1.30 மணிநேரம் மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **8×1=8**

1) அறநெறியில் வாழ்பவர்கள் உயிரைக் கவர வரும் ............ க் கண்டு அஞ்சமாட்டார்கள்
அ) புலனை ஆ) அறனை இ) நமனை ஈ) பலனை

2) ஞானியர் சிறந்த கருத்துகளை மக்களிடம் ..........
அ) பகர்ந்தனர் ஆ) நுகர்ந்தனர் இ) சிறந்தனர் ஈ) துறந்தனர்

3) உள்+இருக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...........
அ) உள்ளேயிருக்கும் ஆ) உள்ளிருக்கும் இ) உளிருக்கும் ஈ) உள்ருக்கும்

4) கல்வியோடு .............. கற்க வேண்டும் என்பது அயோத்திதாசர் கருத்து
அ) சிலம்பமும் ஆ) கைத்தொழிலும்
இ) கணிப்பொறியும் ஈ) போர்த்தொழிலும்

5) அடி ............ வகைப்படும்
அ) இரண்டு ஆ) நான்கு இ) எட்டு ஈ) ஐந்து

6) அடுத்தவர் வாழ்வைக் கண்டு .............. கொள்ளக் கூடாது
அ) உவகை ஆ) நிறை இ) அழுக்காறு ஈ) இன்பம்

7) அம்பேத்கரின் சமூகப் பணிகளைப் பாராட்டி இந்திய அரசு ............... விருது வழங்கியது
அ) பத்மஸ்ரீ ஆ) பாரத ரத்னா இ) பத்மவிபூசன் ஈ) பத்மபூசன்

8) பிறிதுமொழிதல் அணியில் .............. மட்டும் இடம்பெறும்
அ) உவமை ஆ) உவமேயம் இ) தொடை ஈ) சந்தம்

Padasalai.Net

**II. எவையேனும் ஐந்து குறுவினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்** **5×2=10**

9) மக்களின் உள்ளத்தில் நிலைபெற்று வாழ விரும்புபவர் செய்ய வேண்டியது யாது?

10) மனிதனின் மனம் கலங்கக் காரணமாக அமைவது யாது?

11) ஒரு சிறந்த வழிகாட்டி எவ்வாறு இருக்க வேண்டும் என அயோத்திதாசர் கூறுகிறார்?

12) இருவகை அசைகளையும் விளக்குக.

13) இவ்வுலகம் யாரால் இயங்குவதாகத் திருக்குறள் கூறுகிறது?

14) மனிதர்களின் பொது இயல்பாகக் கன்னிப்பாவை நூல் கூறுவது யாது?

15) தோல்வி எப்போது தூண்டுகோலாகும்?

16) அம்பேத்கர் தன் பெயரை ஏன் மாற்றிக்கொண்டார்?

**III. மனப்பாடப்பகுதியை அடிபிறழாமல் எழுதுக** **4+2=6**

17) 'ஒன்றே குலமும் ...........' எனத் தொடங்கும் திருமந்திரப்பாடல்

18) கான முயல் ........... எனத் தொடங்கும் திருக்குறள்

**IV. கீழ்க்காணும் மொழிப்பயிற்சி வினாக்களுக்கு விடையளிக்க** **3×2=6**

19) **இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக.**

அ) மழை நன்கு பெய்தது. எங்களால் விளையாட முடியவில்லை

ஆ) குணங்குடி மஸ்தான் சாகிபு எக்காளக் கண்ணி நூலை இயற்றியுள்ளார். நந்தீசுவரக் கண்ணி நூலை இயற்றியுள்ளார்

ஆ) குணங்குடி மஸ்தான் சாகிபு எக்காளக் கண்ணி நூலை இயற்றியுள்ளார். நந்தீசுவரக் கண்ணிநூலை இயற்றியுள்ளார்.

20) **கலைச்சொல் தருக**

அ) Integrity ஆ) Constitution

21) கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக

அ) சிறுமி ............ (தனது / தமது) கையில் மலர்களை வைத்திருந்தாள்

ஆ) குழந்தைகள் .................. (தங்களால் / தம்மால்) இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்கின்றனர்.

**V. எவையேனும் இரண்டு சிறுவினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 2×4=8**

22) மக்களுக்குச் செய்ய வேண்டிய தொண்டு குறித்துத் திருமூலர் கூறுவது யாது?

23) அரசியல் விடுதலை பற்றிய அயோத்திதாசரின் கருத்துகள் யாவை?

24) இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக அம்பேத்கர் ஆற்றிய பணிகள் யாவை?

25) இரட்டுறமொழிதல் அணி எவ்வாறு பொருள் தரும்?

**VI. ஏதேனும் ஒரு நெடுவினாவிற்கு விடையளிக்கவும் 1×6=6**

26) அ) மனித யந்திரம் கதையை மீனாட்சிசுந்தரம் கூறுவதாக மாற்றி எழுதுக

(அல்லது)

ஆ) பூனா ஒப்பந்தம் பற்றி எழுதுக

**VII. ஏதேனும் ஒன்றிற்குக் கட்டுரை வடிவில் விடை தருக 1×6=6**

27) அ) புத்தகம் வாங்கி அனுப்புமாறு உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக

(அல்லது)

ஆ) 'உழைப்பே உயர்வு' - என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக

-------

Padasalai.Net